தேவன் என்னுடைய
தந்தை

தேவனே நீர் என் தந்தை,
என்னை சிருஷ்டித்து உருவாக்கினீர்.[1]

உம்முடைய பிள்ளையாய் ஏற்றுக்கொள்ளப்பட
அன்பினாலே நீர் என்னை முன்குறித்தீர்.[2]
தேவனே, "நான் உனக்கு தகப்பனாய் இருப்பேன்,
நீ என்னுடைய பிள்ளையாய் இருப்பாய்"
என்று நீர் சொல்லியிருக்கிறீர்.[3]
நான் கேட்கும் முன்னே, எனக்கு என்ன தேவை
என்பதை நீர் அறிவீர்.[4]

ஒரு தகப்பன் தன பிள்ளைகளுக்கு இறங்குகிறது
போல, நீர் என் மேல் மனதுருகுகிறீர்,[5]

ராஜ்யத்தை எனக்கு கொடுப்பது பிதாவின் சித்தம்
என்றதாலும், ஒருவரும் என்னை என் தகப்பன்
கையிலிருந்து பறிக்க முடியாது என்றதாலும்,
நான் பயப்படேன்.[6,7]

பயப்படுகிறதற்கு நாம் மீண்டும் அடிமைத்தனத்தின்
ஆவியை பெறாமல், "அப்பா பிதாவே" என்று கூப்பிட
பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியை
நான் பெற்றுள்ளேன்.[8]

[1] உபாகமம் 32:6ஆ
[2] எபேசியர் 1:5
[3] 2 கொரிந்தியர் 6:18
[4] மத்தேயு 6:8
[5] சங்கீதம் 103:13
[6] லூக்கா 12:32
[7] யோவான் 10:29
[8] ரோமர் 8:15

உபாகமம் 32:6
உன்னை ஆட்கொண்டபிதா அவரல்லவா? உன்னை உண்டாக்கி உன்னை நிலைப்படுத்தினவர் அவரல்லவா?

எபேசியர் 1:5
பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக,

2 கொரிந்தியர் 6:18
நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்.

மத்தேயு 6:8
அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்.

சங்கீதம் 103:13
தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்.

லூக்கா 12:32
பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்.

யோவான் 10:29
அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது.

ரோமர் 8:15
அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்.

For more copies of this bookmark please contact a Derek Prince Ministries office below.

DPM-India (English)
admin@derekprince.in
derekprince.com/en-in

DPM-India (Tamil)
admin@derekprince.in
www.derekprince.com/ta

DPM-Asia/Pacific
enquiries@dpm.co.nz
www.derekprince.com/en-nz

DPM-Australia
enquiries@au.derekprince.com
www.derekprince.com.au